வணிகவரி மற்றும் பதிவுத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை –9.

கடித எண். 911/சி1/2014– 2, நாள் 18.03.2014

9633

அனுப்புநர்
எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5. (இணைப்பு)

அய்யா,

பொருள்: தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச்சட்டம், 1939 – தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு வழங்குதல் – படிவம் ''அ''–ல் கூடுதல் இனங்கள் சேர்ப்பது – தொடர்பாக.

பார்வை: 1. அரசுக் கடித எண்.8524/சி1/2011–1, நாள் 03.01.2012.
2. தங்கள் கடித எண்.சட்டக் குழு 4/569/2012, நாள் 20/02/2014.

----

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை 1–ல் காணும் அரசுக் கடிதத்தில், தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு வழங்குவது தொடர்பாக படிவம் 'அ', படிவம் 'ஆ' மற்றும் படிவம் 'இ' ஆகியவை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

3. இந்நேர்வில், பார்வை 2–ல் காணும் கடிதத்தில் அளித்துள்ள தங்களின் பரிந்துரையின் அடிப்படையில் படிவம் 'அ'–வில் செய்துள்ள உரிய திருத்தங்களுக்கு ஒப்புதலளித்து, தங்களின் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

18/3/2014

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

18/3/14

# படிவம்-அ

## வணிகவரித்துறை

### தமிழ் திரைப்படக் கேளிக்கை வரி விலக்கு கோரும் விண்ணப்பம்

விண்ணப்பம் பெற்றதற்கான வரிசை எண் மற்றும் தேதி
(துறையால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது)

---

பெறுநர்
ஆணையர்,
வணிகவரித் துறை,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

I) அ) திரைப்படத்தின் தலைப்பு :

ஆ) மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தால் வழங்கப்பட்ட 'U' சான்றிதழின் வரிசை எண் மற்றும் தேதி :
(சான்று செய்யப்பட்ட நகலினை இணைக்கவும்)

இ) தணிக்கைச் சான்று வழங்கிய அலுவலர் மற்றும் அலுவலக முகவரி :

ஈ) திரைப்படத் தயாரிப்பாளர் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் :

உ) திரைப்பட இயக்குநரின் பெயர் :

ஊ) மொத்த தயாரிப்பு செலவின் விபரங்கள் :

II) இந்தப் படத்தில் பேசப்படும் வசனங்கள், பாடல்கள் அனைத்தும் பெரும்பாலும் தமிழ் மொழியிலேயே உள்ளதா? அல்லது பிற மொழிக் கலப்பு வசன மற்றும் பாடல் வரிகள் உள்ளதா? அவ்வாறு பிறமொழி கலப்பு இருப்பின் பட்டியலிட்டு தனியே இணைக்கவும்:

III) இந்தப்படத்தின் கதைக் கருவானது உண்மைச் சம்பவத்தை, உண்மைக் கதையை, சுய சரிதம், புராண இதிகாசம், பக்தி அல்லது எதனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது எனத் தெளிவாகக் குறிப்பிடவும்:

IV) விண்ணப்பக் கட்டணம் செலுத்திய விபரம்
வரைவோலை எண் :
தேதி :
வங்கியின் பெயர் :

V) திரைப்படத்தினை தமிழ் நாட்டில் முதன்முதலாக எந்த முறையில், எத்தனை திரையரங்குகளில் திரையிட உத்தேசிக்கப்பட்டுள்ளது :

## உறுதிமொழி

அ) இந்தத் திரைப்படத்தை குழு உறுப்பினர்கள் முன்னிலையில் திரையிட திரைப்படச் சுருள் தயாராக உள்ளது எனச் சான்றளிக்கிறேன்.

ஆ) மேலும் இந்த திரைப்படம் அரசாணை நிலை எண்.89, வணிகவரி (ம) பதிவுத் துறை, நாள் 21.07.2011ல் கூறியுள்ள நான்கு நிபந்தனைகளை பூர்த்தி செய்கிறது என உறுதி கூறுகிறேன்.

இ) எந்த காரணத்திற்காகவாவது இப்படத்திற்கு வழங்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு ஆணையானது ரத்து செய்யப்படும்பட்சத்தில் அதுநாள்முதல் கேளிக்கை வரியினை அரசுக் கணக்கில் செலுத்த உரிய நடவடிக்கை எடுப்பேன் என உறுதி கூறுகிறேன்.

ஈ) திரைப்படத்தை வணிகவரி ஆணையர் அவர்கள் தெரிவிக்கும் நாளில் திரையிட தயாராக உள்ளேன் என உறுதி கூறுகிறேன்.

உ) திரையிடப்படும் நாளன்று, கடைசி நேரத்தில் சில தவிர்க்க முடியாத காரணங்களை குறிப்பிட்டு எழுத்து பூர்வமாக திரைப்படத்தினை திரையிட இயலவில்லை என தெரிவிக்கும்பட்சத்தில் தேர்வுக் குழு இரத்து செய்யப்பட்டால் விண்ணப்பத்தின் மீதான எந்த ஒரு முன்னுரிமையும் கோர மாட்டேன் என உறுதி கூறுகிறேன்.

தேதி : தயாரிப்பாளர் கையொப்பம் :

இடம் : பெயர் :

அரசாணை நிலை எண்.89, வணிகவரி (ம) பதிவுத் துறை, நாள்.21.07.2011ன் படி தமிழ்ப் படங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு கோரும் தயாரிப்பாளர்கள் கீழ்க்கண்ட படிவங்கள் மற்றும் ஆவணங்களை இணைக்க வேண்டும்:–

அ) விண்ணப்பக் கட்டணமாக ரூ. <u>10,000/–</u> வங்கி வரைவோலை மூலம் ஆணையர், வணிகவரித் துறை என்ற பெயருக்கு எடுத்து இணைக்கப்பட வேண்டும்.

ஆ) திரைக்கதை சுருக்கம் (Synopsis) மற்றும் முழுப் பாடல் வரிகள் தமிழில் எட்டு நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

இ) திரைக்கதையின் முழு வசனம் தமிழில் ஒரு நகல் இணைக்கப்பட வேண்டும்.

ஈ) சான்றொப்பம் இட்ட மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தின் **'U'** சான்றிதழின் நகல்.

உ) திரைப்படத்தினை திரையிட்டு காண்பிக்கும்பொழுது **'U'** தணிக்கைச் சான்றிதழ் அசலாக காண்பிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட ஆவணங்கள் இல்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

[signature] 18/3/2014
பிரிவு அலுவலர்
18.3.14.